# ஆண்டு இறுதித்தேர்வு – 2024

**A**

வகுப்பு : 8

## சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?
(அ) வாஸ்கோடகாமா (ஆ) பார்த்தலோமியோ டயஸ்
(இ) அல்போன்சோ – டி – அல்புகர்க் (ஈ) அல்மெய்டா

2. மகல்வாரி முறையில்" மகல்" என்றால் என்ன?
(அ) வீடு (ஆ) நிலம் (இ) கிராமம் (ஈ) அரண்மனை

3. பெண்களுக்கான தேசிய ஆணையம் ________ ஆண்டு அமைக்கப்பட்டது.
(அ) 1990 (ஆ) 1992 (இ) 1996 (ஈ) 1995

4. பின்வரும் எந்த அறிக்கை / அறிக்கைகள் உண்மையற்றவை?
(i) ஸ்ரீரங்கராயலு ஆங்கிலேயர்களுக்கு மதராசபட்டணத்தை மானியமாக வழங்கினார்.
(ii) டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் புனித ஜார்ஜ் கோட்டை கட்டியதற்கு பொறுப்பானவர்கள்.
(iii) 1969 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.
(அ) i மட்டும் (ஆ) i மற்றும் ii (இ) ii மற்றும் iii (ஈ) iii மட்டும்

5. பருத்தி வளர ஏற்ற மண் எது?
(அ) செம்மண் (ஆ) கரிசல் மண் (இ) வண்டல் மண் (ஈ) மலை மண்

6. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
(அ) பிரதமர் (ஆ) குடியரசுத்தலைவர்
(இ) முதலமைச்சர் (ஈ) இந்திய தலைமை நீதிபதி

7. சமூக அறிவியலின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று ________.
(அ) மக்கள் இடம்பெயர்தல் (ஆ) பறவைகள் இடம்பெயர்தல்
(இ) ஊர்வன இடம்பெயர்தல் (ஈ) விலங்குகள் இடம்பெயர்தல்

8. சார்புத்துறை ________ வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
(அ) 4 (ஆ) 3 (இ) 2 (ஈ) 5

9. இராணுவ தினம் அனுசரிக்கப்படும் நாள்________ ஆகும்.
(அ) ஜனவரி 15 (ஆ) பிப்ரவரி 1 (இ) மார்ச் 10 (ஈ) அக்டோபர் 7

10. கலப்பு பொருளாதார நன்மைகளின் கலவை என்பது ________.
(அ) முதலாளித்துவம் (ஆ) சமதர்மம்
(இ) அ மற்றும் ஆ சரி (ஈ) அ மற்றும் ஆ தவறு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

11. 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் ________.
12. பிரெஞ்சு இராணுவத்தின் மூலம் நவீன போர் முறைகளில் பயிற்சி பெற்றவர் ________.
13. பருவ மழை பொய்ப்பின் காரணமாக ________ ஏற்படுகிறது.
14. அதிக வேகம் ; ________ ஆபத்து.
15. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ________.

**III.பொருத்துக.** 5 x 1 = 5

| | | |
|---|---|---|
| 16. இரயத்துவாரிமுறை | – | 1098 |
| 17. ஜான்சி | – | மதராஸ் |
| 18. கருப்பு பணம் | – | இலட்சுமி பாய் |
| 19. குழந்தை உதவி மைய எண் | – | விரைவான நீதி |
| 20. லோக் அதாலத் | – | வரி ஏமாற்றுபவர்கள் |

www.Padasalai.Net

**IV.சரியா, தவறா? எனக் குறிப்படுக.** 5 x 1 = 5

21. மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத்தன்மைக் கொள்கையைப் பின்பற்றினார்.
22. RMSA திட்டமானது பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்டது.
23. பெரு நகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.
24. இ – நீதிமன்றங்கள் திட்டம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
25. இன்போசிஸ் தகவல் தொழில்நுட்பம் பொதுத்துறை நிறுவனமாகும்.

**V.வேறுபடுத்துக.** 2 x 2 = 4

26. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்.
27. இடர் மற்றும் பேரிடர்.

**VI. காரணம் கூறுக.** 3 x 2 = 6

28. தீப்பாறைகள் எரிமலைப் பகுதிகளில் காணப்படுகிறது.
29. வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் அமைந்துள்ளன.
30. விமானங்களில் செயற்கை அழுத்தத்தை உருவாக்கி பயணிகளை சுவாசிக்க செய்கின்றனர்.

**VII. எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 10 x 2 = 20

31. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
32. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
33. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
34. செல்வச் சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.
35. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களை குறிப்பிடுக.
36. வளிமண்டலக் காற்றழுத்தம் என்றால் என்ன?
37. புவிப்பட அளவை – வரையறு.
38. நகரமயமாக்கல் என்றால் என்ன?
39. வறட்சியின் வகைகள் யாவை?
40. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயர்களை எழுதுக.
41. மனித உரிமைகள் என்றால் என்ன?
42. பண்டமாற்று முறை என்றால் என்ன?

**VIII. எவையேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி.** 6 X 5 = 30

43. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?
44. நிலையான நிலவரி திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க.
45. சுதந்திர போராட்டத்தில் பெண்களின் பங்கினைப் பற்றி விவரி.
46. மண்ணின் வகைகளை விவரி.
47. நீர் சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி.
48. நில அதிர்வை வரையறுத்து அதன் விளைவுகளைப் பட்டியலிடுக.
49. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
50. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**IX. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.** 10 X 1 = 10

51. 1. மெட்ராஸ் 2. கொல்கத்தா 3. நாளந்தா 4. கான்பூர் 5. மும்பை
6. மீரட் 7. கேதா 8. ஏனாம் 9. சூரத் 10. பானிபட்

**X. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.** 5 x 1 = 5

52. 1. பசிபிக் பெருங்கடல் 2. மொராக்கோ 3. அந்தமான் நிக்கோபார் தீவுகள்
4. ரஷ்யா 5. ஆப்ரிக்கா

www.Padasalai.Net




www.Padasalai.Net


உலக வரைபடம்
Scale 1:182,000,000 1cm = 1820 kms
N